நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண். 8/2021

அரசு தரப்புக்காக அ. சா.10 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.C.தேவேந்திரன், காவல் ஆய்வாளர் | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 18 | | | |

எதிரி ஆஜரில் இருந்தார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 03rd day of October 2025.

**<u>முதல் விசாரணை</u>**– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 12.12)

நான் தற்போது குமராட்சி காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2019 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் அண்ணாமலை நகர் காவல் வட்ட ஆய்வாளராக பணிபுரிந்தபோது 09.09.2019 ஆம் தேதி அப்போது அங்கு பணிபுரிந்து வந்த உதவி ஆய்வாளர் திரு.பரணிதரன் என்பவர் அண்ணாமலை நகர் ஆர்.எம்.எம் ஜி.எச்–ல் இருந்து கிடைத்த தகவலின்பேரில் உள்நோயாளியாக சிசிக்சையில் இருந்த சுசித்ரா வயது–19 த/பெ.செல்வமணி என்பவரிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் அண்ணாமலை நகர் காவல்நிலைய குற்ற எண்.227/2019 சட்டப்பிரிவு 341, 294(b), 326(A),

307 இ.த.ச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எனது விசாரணைக்கு வைத்ததை 10.09.2019 ஆம் தேதி காலை 06.00 மணிக்கு விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடமான அண்ணாமலை பல்கலைக்கழக விருந்தினர் மாளிகை முன்பு ஆஜர் சாட்சிகள் ரமேஷ் மற்றும் உத்திராபதி என்பவர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். (அந்த மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது). பின்பு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளான சுப்ரமணியன், மாதவி, ராதிகா, பிரியங்கா, ராஜசேகர் ஆகியோர்களை விசாரித்து தனிதனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு பார்வை மகசர் சாட்சிகள் ரமேஷ் மற்றும் உத்திராபதியை விசாரணை செய்து வாக்குமூலம் தயார் செய்தேன். சம்பவ இடத்தில் எதிரி விட்டுச்சென்ற ரெட்சன் டாய்லட் கிளீனர் சுமார் 500 ml அளவு கொண்ட வெள்ளைநிற பிளாஸ்டிக் பாட்டில் ஒன்றை சாட்சிகள் ரமேஷ் மற்றும் உத்திராபதி முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைபற்றினேன். (அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது). பின்பு இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட வழக்கின் வாதி சுசித்ரா, மகேஸ்வரி, சோழன் பாபு, ஜீவிதா ஆகியோர்களை அண்ணாமலை ஆர்எம்எம் ஜி.எச் அவசர சிகிச்சை பிரிவில் விசாரித்து தனிதனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் விசாரணையில் இருந்தும் சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையிலும் எனது ரகசிய விசாரணையில் இருந்தும் சம்பவம் நடந்தது உண்மை என தெரியவந்தது. பின்பு இவ்வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில் எதிரியானவர் ஆர்எம்எம் ஜி.எச் அவசர சிகிச்சை பிரிவில் உள்நோயாளியாக இருந்த எதிரியை 10.09.2019 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு காரணம் கூறி கைது செய்தும் 11.10 மணிக்கு அவரது உறவினர்களுக்கு கைது பற்றிய தகவலை தெரிவித்தும் உச்ச நீதிமன்ற கட்டளைகளை நிறைவேற்றியும் அவசர சிகிச்சை பிரிவில் இருந்த எதிரி இவ்வழக்கின் சம்பவம் பற்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் வீரமணி, ராதாகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னை அழைத்து சென்றால் சம்பவ இடத்தையும் சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தியையும் *(எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்*

*ஒப்புதல் வாக்குமூலத்தில் "பயன்படுத்திய" என்று குறிப்பிட்டுள்ள வார்த்தையை இந்த சாட்சியின் வாக்குமூலத்தில் பதிவு செய்ய இயலாது என்று தெரிவித்தார். ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. ஒப்புதல் வாக்குமூலத்தில் கத்தியை மறைத்து வைத்து இருந்த இடத்தை கூறும்போது "பயன்படுத்திய" என்ற வார்த்தையையும் சேர்த்துதான் எதிரி கூறியதாக ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் ஆட்சேபணை நிராகரிக்கப்பட்டு இந்த வார்த்தையும் சேர்த்து சாட்சியின் வாக்குமூலத்தில் பதிவு செய்யப்படுகிறது).* தெற்கிருப்பில் உள்ள தனது ரூமின் அருகில் மறைத்து இருப்பதாக கூறியதன் பேரில், சிகிச்சையில் இருந்த எதிரியை இரவு 21.00 மணிக்கு சிசிக்சை முடித்து எதிரியை அழைத்துக்கொண்டு அவர் குறிப்பிட்ட இடத்திற்கு சென்று சாட்சிகள் வீரமணி, ராதாகிருஷ்ணன் முன்னிலையில் சுமார் 19 செ.மீ நீளமுள்ள சிறிய கத்தி, மஞ்சள் நிற கைப்பிடி சுமார் 9 செ.மீ அதன் இரும்பு பாகம் சுமார் 10 செ.மீ என்ற கத்தியை கைபற்றுதல் மகசரில் கைபற்றினேன். (ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி 3வது பக்கத்தில் "என்னை" என்று ஆரம்பிப்பத்தில் இருந்து "ஆஜர் செய்கிறேன்" என்று முடியும் வரை உள்ள 3 வரிகள் கொண்ட பகுதி **அ.த.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) பின்பு எதிரி மற்றும் கைபற்றுதல் மகசருடன் நிலையம் வந்து திரேக பரிசோதனைக்கு பின்னர் பாரா வசம் ஒப்படைக்கப்பட்டார். பின்பு எதிரியை தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு உத்தரவு கேட்டு அனுப்பி வைத்தேன். வாதிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ஜீவிதா மற்றும் கிஷோர்குமார் ஆகியோர்களை விசாரித்து மருத்துவ சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர்களின் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கின் சட்டப்பிரிவினை 341, 294(b), 326(A), 307 இ.த.சவில் இருந்து சட்டப்பிரிவு 341, 294(b), 326(A), 307, 506(ii) இ.த.ச ஆக பிரிவு மாற்றம் செய்து பிரிவு மாற்றல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். (அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.த.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது). பின்னர் பாதிக்கப்பட்ட சாட்சி சுசித்ரா என்பவரின் கு.வி.மு.ச பிரிவு 164(4) –ன் கீழ் வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டுகோள் கடிதம் கொடுத்து நீதித்துறை நடுவர் எண்.1, சிதம்பரம் அவர்கள் முன்பு இரண்டாம் நிலை காவலர் திரிபுரசுந்தரி 1888 என்பவர் மூலமாக சாட்சி சுசித்ராவை ஆஜர் செய்து

ரகசிய வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. கு.வி.மு.ச பிரிவு 164(4) வாக்குமூலம் பதிவு செய்ய ஆஜர் படுத்திய இரண்டாம் நிலை காவலர் திரிபுரசுந்தரி 1888 என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் பரணிதரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது விசாரணையை முடித்து 12.11.2019 ஆம் தேதி சட்டப்பிரிவு 341, 294(b), 326(A), 307, 506(ii) இ.த.ச படி எதிரியின் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். சாட்சி மாதவி, சாட்சி வீரமணி, ராஜசேகர் ஆகியோர் சொன்ன விவரங்களை தான் வாக்குமூலங்களாக பதிவு செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

அண்ணாமலை கெஸ்ட் ஹவுசில் உள்ள சாலைக்கு பெயர் உள்ளதா என்றால் அந்த பெயர் ஞாபகம் இல்லை. வழக்கு நாட்குறிப்பில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்று கேட்டால் அண்ணாமலை பல்கலைக்கழக மெயின்ரோடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அண்ணாமலை பல்கலைக்கழக மெயின்ரோடு என்பது எங்கு ஆரம்பித்து எங்கு முடிகிறது என்று கேட்டால் ராஜேந்திரன் சிலையில் ஆரம்பித்து போஸ்ட் ஆபிஸ் கார்னரில் முடிகிறது. ராஜேந்திரன் சிலை என்ற இடத்தில் இருந்து போஸ்ட் ஆபிஸ் கார்னர் என்பது 3 கி.மீ தூரம் என்று சொன்னால் சரியல்ல. அளந்து பார்த்தால் தான் தெரியும் என்று சாட்சி கூறுகிறார். (நீதிமன்றம் அவரை சரியான முறையில் பதில் அளிக்க வேண்டும் என்று குறிப்பிட்ட பிறகு) சுமார் ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் இருக்கலாம் என்று கூறுகிறார். ராஜேந்திரன் சிலை இருக்கும் ரோடு பெயர் ரயில்வே பீடர் ரோடு என்று சொன்னால் அது சிவபுரி ரோடு என்று சொல்வார்கள். ராஜேந்திரன் சிலையில் இருந்து துணை வேந்தர் இல்லம், குளம், சாஸ்திரி ஹால், கெமிஸ்டரி டிப்பார்ட்மெண்ட், ஜூவாலஜி டிபார்ட்மெண்ட், மியூசிகல் டிபார்ட்மெண்ட் ஆகியவற்றை தாண்டி போஸ்ட் ஆபிஸ் கார்னர் செல்ல வேண்டும் என்றால் மியூசிகல் டிபாட்மண்டிற்கு பிறகு கெஸ்ட் அவுஸ் அதன்பிறகு போஸ்ட் ஆபிஸ் கார்னர். அண்ணாமலை நகரில் எத்தனை

கெஸ்ட் அவுஸ் உள்ளது என்றால் ஒன்று தான் உள்ளது. பல அறைகள் உள்ளன. அ.த.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள மாதிரி வரைபடத்தில் X என்ற குறியீடு செய்யப்பட்டு சம்பவ இடம் என்று குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதன் அடிப்படையில் அந்த சம்பவ இடத்தை குறிப்பிட்டுள்ளேன் என்று கேட்டால் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி குறிப்பிட்டபடி சம்பவ இடத்தை நான் குறியீடு செய்தேன். சம்பவ இடத்தில் தடயங்கள் இருந்ததா என்று கேட்டால் இருந்தது. சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. சம்பவ இடம் என குறிப்பிட்டுள்ள ரோடு தான் அண்ணாமலை பல்கலைக்கழக மெயின்ரோடு என்று சொன்னால் சரிதான். அந்த மெயின்ரோடு போக்குவரத்து நிறைந்த பகுதி என்று சொன்னால் கல்லூரிக்கு வரும் வாகனங்கள் மட்டுமே செல்லக்கூடிய பகுதி என்று நான் சொல்கிறேன். தனியார் கார்கள், ஆட்டோக்கள் ஆகியவை அந்த வழியாக தான் செல்லுமா என்று கேட்டால் செல்லும் கேட்டில் வாட்ச் மேன் செக் செய்து அனுப்புவார்கள் என்று நான் சொல்கிறேன். ராஜேந்திரன் சிலை அருகே வாட்ச் மேன் உள்ளார்கள். இவ்வாறு நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் கைப்பற்றியதாக சொல்லப்படும் ரெட்சன் டாய்லட் கிளீனர் பாட்டில் சம்பவ நேரமான மாலை 06.00 மணியில் இருந்து மறுநாள் 10.09.2019 காலை 06.00 மணி வரை அந்த சம்பவ இடத்தில் தான் இருந்ததா என்று கேட்டால் ஆமாம். அந்த கைப்பற்றப்பட்ட பாட்டிலில் என்ன இருந்தது ஆசிட் இருந்ததா அல்லது வேறு ஏதாவது திரவமா என்பதை அறிந்துகொள்ள நான் அந்த பாட்டிலை ரசாயன பகுப்பாய்விற்கு அனுப்பி வைத்தேனா என்று கேட்டால் காலி பாட்டில் என்பதால் அனுப்பி வைக்கவில்லை. அந்த காலி பாட்டிலில் கைரேகை இருந்ததா என்பதை அறிய நிபுணருக்கு அனுப்பி வைக்கப்பட்டதா என்றால் இல்லை. மாதிரி வரைபடத்தில் புதிய கெஸ்ட் ஹவுஸ் பழைய கெஸ்ட் ஹவுஸ் என்று குறிப்பிட்டப்பட்டுள்ளதா என்றால் சரிதான். ஒரே காம்பவுண்டிற்குள் உள்ளது. இரண்டு கெஸ்ட் ஹவுஸ்க்கு நடுவில் ரோடு உள்ளது என்றால் ரோடு இல்லை. செல்லும் வழி உள்ளது. அது பொதுவழி அல்ல. தாமரை இல்லம் என்பது ஆண்கள் தங்கும் விடுதியா அல்லது பெண்கள் தங்கும் விடுதியா என்று கேட்டால் தாமரை இல்லம் பெண்கள் மட்டும் தங்கும் விடுதி என்று நான்

சொல்கிறேன். தாமரை இல்லம் கெஸ்ட் ஹவுசில் இருந்து எவ்வளவு தூரம் உள்ளது என்றால் சாலைக்கு இந்த பக்கம் கெஸ்ட் ஹவுஸ் அந்தப் பக்கம் தாமரை இல்லம். தூரம் எனக்கு தெரியவில்லை. தாமரை இல்லத்தை பற்றி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடவில்லை. எதிரி சிகிச்சை பெற்றது சம்மந்தமான மருத்துவ ஆவணங்களை இறுதி அறிக்கையுடன் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரிக்கு என்ன காயம் இருந்தது, அவர் சுயநினைவுடன் இருந்தாரா என்பதை மருத்துவரை விசாரித்து குறிப்பிட்டுள்ளேனா என்றால் எதிரி சுயநினைவுடன் வாக்குமூலம் அளித்ததால் அதற்கான அவசியம் ஏற்படவில்லை. ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தெற்கிருப்பு என்ற கிராமத்தில் நிறை தெருக்கள் உள்ளது என்று சொன்னால் சரிதான். எதிரி தங்கியிருந்த தெற்கிருப்பு இடம் எந்த தெருவில் இருந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் எதிரி அடையாளம் காட்டியதால் அதைபற்றி குறிப்பிடவில்லை. அது எதிரியின் சொந்த இடமா வாடகை இடமா, குடிசை பகுதியா மாடி வீடா என்று குறிப்பிடவில்லை என்றால் எதிரி தங்கியிருக்கும் ரூமின் அருகில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வேறு எதுவும் குறிப்பிடவில்லை. ரூமின் அருகில் என குறிப்பிட்டிருப்பது காலி இடமா புதராக இருந்ததாக என்றால் தற்போது நினைவில் இல்லை. வழக்கு நாட்குறிப்பில் குறிப்பிடவில்லையா என்று கேட்டால் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து அவரே அழைத்து சென்று எடுத்து கொடுத்ததால் அதை குறிப்பிடவில்லை. எதிரி என்னிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றும் எதையும் ஆஜர் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிரி இருந்த அவசர சிகிச்சை பிரிவு சம்மந்தமான மருத்துவரை விசாரணை செய்யவில்லை என்றால் எதிரியும் வாதியும் ஒன்றாக காதலித்து வந்து எதிரி சுசித்ரா படிக்கும் இடத்திற்கு வந்து இந்த வழக்கின் குற்றம் செய்ததால் சக மாணவர்களிடம் இருந்து அவரை காப்பாற்றுவதற்காக எதிரியை அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டது என்று நான் கூறுகிறேன். இந்த விவரங்கள் வழக்கு நாட்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. படிவம் 95 உடன் கைப்பற்றப்பட்ட பொருட்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படவில்லை என்றால் சரியல்ல. சுசித்ராவிற்கு மருத்துவ சிகிச்சை அளித்த கண்

மருத்துவர் மற்றும் காது, மூக்கு, தொண்டை மருத்துவ நிபுணர் ஆகியோரை நான் விசாரித்தேனா என்றால் கண் மருத்துவர் மற்றும் காது, மூக்கு, தொண்டை மருத்துவ நிபுணர் ஆகியோருடைய அறிக்கையின் பேரில் இறுதி அறிக்கை கொடுக்க கிஷோர்குமாரை விசாரித்தேன். எனவே கண் மருத்துவர் மற்றும் காது, மூக்கு, தொண்டை மருத்துவ நிபுணர் ஆகியோரை நான் தனியாக விசாரிக்கவில்லை. கண் மருத்துவர் மற்றும் காது, மூக்கு, தொண்டை மருத்துவ நிபுணர் ஆகியோருடைய மருத்துவ சிகிச்சை அறிக்கைகளை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கவில்லை என்றால் இறுதி கருத்துரை மட்டுமே அனுப்பியுள்ளேன். மற்ற ஆவணங்களை அரசு மருத்துவமனையில் உள்ளது. புதுச்சேரி அரவிந்த கண் மருத்துவனையில் சுசித்ராவிற்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரிக்கவில்லையா என்றால் விசாரிக்கவில்லை. மருத்துவர்கள் ஜீவிதா, கிஷோர்குமார் ஆகியோர் சுசித்ராவிற்கு சிகிச்சை அளித்ததாக நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ஜீவிதா என்பவர் மருத்துவர் இல்லை. சுசித்ராவுடன் இருந்த அட்டண்டர். அவர் சுசித்ராவுடன் தாமரை இல்லத்தில் அறை எண்.318–ல் தங்கியிருந்த சகதோழி. ஜீவிதா என்பவரை மருத்துவமனையில் விசாரித்ததாக சொன்னேன். அவர் மருத்துவர் அல்ல. ஜீவிதா என்பவரை நான் விசாரித்தபோது சுசித்ரா என்பவரின் உறவினர் என்று குறிப்பிட்டுள்ளாரா என்றால் குறிப்பிட்டுள்ளார். நான் இந்த வழக்கில் கைப்பற்றியதாக கூறும் அ.த.பொ.சா.1 பாட்டில் மற்றும் அ.த.பொ.சா.2 கத்தி ஆகியவற்றிற்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அ.த.பொ.சா.1 பாட்டில் மற்றும் அ.த.பொ.சா.2 கத்தி ஆகியவை இந்த வழக்கிற்காக பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றும் எனவே தான் படிவம் 95 உடன் இந்த பொருட்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ.8 பார்வை மகசரில் சம்பவ இடம் என்று குறிப்பிடப்பட்டிருப்பதற்கு அருகில் செக்யூரிட்டி அறை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தில் இருந்த செக்யூரிட்டி யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். வழக்கை சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது பொய்யான இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை
(முடிக்கப்பட்ட நேரம் 01.36)

2025 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 03 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*"என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

(Sd/–G.Kulasekaran)
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.